
நற்செய்தி
ராணி மார்க் இந்தியா ஓடுகள்
மீண்டும் விற்பனைக்கு
வந்துவிட்டது
தரம் மிக்க நீடித்த பாவனைக்கு
ராணி மார்க் இந்திய ஓடுகளை
வாங்கி பயனடையுங்கள்!
விபரங்கட்கு:
லீடன் ரேடர்ஸ்,
சேகரம் கட்டிடம்,
188/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 693

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

Entered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No' QB/8948/78
மலர்: 21 ஆடி: 1 ஷஃபா: 21 இதழ்: 154
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 17-7-79

1979 -7-18 PERIODICALS DIVISION LIBRARY



இந்தியா ஓடுகளுக்கு
தொடர்பு கொள்ளவும்:
லீடன் ரேடர்ஸ்,
யாழ்ப்பாணம்.

# வதந்திகளை நம்பவேண்டாம்!

# பிரதமர் - 'அமிர்' கூட்டறிக்கை

## நிலைதளராமல் அமைதியுடன் இருக்க கோரிக்கை

(கொழும்பு)



பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும், எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கமும் கூட்டாக நாட்டு மக்களுக்கு நேற்று விடுத்துள்ள அறிக்கையில், நாட்டு மக்களை அமைதியாக இருக்கும்படியும், வதந்திகளை நம்பவேண்டாமென்றும் கேட்டுள்ளனர். பிரச்னை எதுவாக இருந்தாலும் அமைதியான முறையில் அதற்குத் தீர்வுகாணமுடியுமென்று இரு தலைவர்களும் தமது கூட்டறிக்கையில் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.



இக்கூட்டறிக்கையில் பிரதமர் ஆர். பிரேமதாசாவும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தி வருமாறு:

### வதந்திகளை நம்பாதீர்

"நாட்டுமக்கள் நிலை தளரும்பாமல் அமைதியாக இருக்க வேண்டியது அவசியமாகும். வதந்திகளை நம்பாதீர்கள். விஷமிகளைப் பொருட்படுத்தாமல் நாட்டில் அமைதியை ஏற்படுத்துங்கள்'

"விஷமிகள் பரப்பும் வதந்திகளை முளையிலேயே கிள்ளி எறியவேண்டியது உங்களின் பெருங்கடமையாகும். நாட்டில் நல்லெண்ணத்தைப் பரப்பி சட்டத்தை நிலைநாட்டுவது உங்கள் பொறுப்பாகும்.

### உங்கள் கடமை

"நாட்டில் அமைதியைப் பாதுகாப்பதிலும் வதந்திகளை முளையிலேயே கிள்ளி எறிவதிலும் உங்களுடன் சகல எம். பிக்களும் அரசியல்வாதிகளும், சமூகத்தலைவர்களும் மதத்தலைவர்களும் ஈடுபட்டு கிராமங்கள், தேர்தல் தொகுதிகள் தோறும் தங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டும்.

"அப்பாவி மக்களின் உயிர், உடமை எந்த விதத்திலும் பாதுகாக்கப்படவேண்டும்.

### நாம் பொறுப்பு

"சமூகவிரோதச் சக்திகளிடமிருந்து மக்களைப் பாதுகாத்து, நாட்டின் இன ஒற்றுமையைப் பேணும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

"மக்கள் வன்செயல்களில் இறங்கக்கூடாது அரசியல் கிளர்ச்சிகள் என்ற போர்வையில் வன்செயலில் ஈடுபடக்கூடாது. பொதுவான பிரச்னை எதுவாக இருந்தாலும் அமைதியான முறையில் அதற்குத் தீர்வு காண்போம்.

### நாடுகளுக்கு உதாரணம்

"எமது மதம், பழமையும்,

[6ம் பக்கம் பார்க்க]

புதிய அரசு அமைப்பதில்

# பெருந்தலைவர்கள் மத்தியில் இழுபறி

### ராஷ்டிரபதியுடன் ஆலோசனை

[புதுடில்லி]

பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் தமது பதவியை நேற்றுமுன்தினம் ராஜிநாமாச்செய்ததைத் தொடர்ந்து, புதிய பிரதமர் பதவிக்கு மும்முனைப்போட்டி ஏற்பட்டிருக்கும் அதேநேரத்தில், ஆட்சியைக் கைப்பற்றுவதில் பெரும் தலைவர்கள் மத்தியில் 'இழுபறி நடப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய ஜனாதிபதி திரு. சஞ்சிவரெட்டி நேற்று முதற்தடவையாக பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடனும் ஆட்சி அமைப்பது குறித்து விரிவாக ஆலோசனை நடத்தினார்

மத்தியில் புதிய அரசாங்கமொன்றை அமைப்பதில் இப்பொழுது மும்முனைப்போட்டி நடக்கும் அதே நேரத்தில் ஆதரவாளர்களைத் தம்பக்கம் இழுப்பதில் அதி தீவிரப் போட்டி நடந்துகொண்டிருக்கிறது

### ராஷ்டிரபதியுடன் சந்திப்பு

நேற்று முதல்தடவையாக பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய இந்திய ராஷ்டிரபதி திரு. சஞ்சிவரெட்டி தொடர்ந்து பல தலைவர்களையும் சந்தித்து வருகின்றார். லோகசபையின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவான், ஜனதாக்கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் ஆகியோர் தனித்தனியாக நேற்றுக் காலை ராஷ்டிரபதியைச் சந்தித்து மத்தியில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி பற்றி நீண்ட நேரம் உரையாடினர்.

### சரண்சிங் அறிவிப்பு

ராஷ்டிரபதியை நேற்றுக் காலை சந்தித்த திரு. சரண்சிங், புதிய அரசாங்கம் அமைக்க தாம் தயாராக இருப்பதாகக் கூறினார்.

"ஜனதாவிலிருந்து வெளியேறியவர்களில் எண்பத்தெட்டு எம் பிக்கள் எமது புதிய கட்சியில் உள்ளனர். இவர்களுடன் வேறு சில குழுக்களின் உதவியுடன் புதிய அரசாங்கத்தை என்னால் அமைக்க முடியும்'' என்று திரு. சரண்சிங் ராஷ்டிரபதியிடம் தெரிவித்துள்ளார்.

### இந்திரா முயற்சி

இதற்கிடையே திருமதி

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ் பஸ்நிலையத்தில் சம்பவம்:

# தாலிக்கொடி பறித்தவர் உடன் பிடிபட்டார்!

[யாழ்ப்பாணம்]

யாழ் பஸ்நிலையத்தில் பஸ்ஸுக்காக 'கியூ'வில் நின்றுகொண்டிருந்த பெண்ணின் ஏழாயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை பறித்துக்கொண்டு ஓடியவர், பஸ் நிலையத்திலேயே பிரயாணிகளாலும் பொலிசாராலும் துரத்திப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். தாலிக்கொடி மீட்கப்பட்டது.

இச் சம்பவம் நேற்று மாலை நிகழ்ந்தது.

நல்லூரைச் சேர்ந்த ரஞ்சிதமலர் நேசதுரை என்பவரின் தாலிக்கொடியே அபகரிக்கப்பட்டது. கைதானநபர் மானிப்பாயைச் சேர்ந்த எம். குமாரசிங்கம் ஆவர்,

## வரி விளம்பரம்

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & GAS) இலெக்ரிக் வயறிங்) ரேடியோ (Transistor) Building Tech nology P. M. G Certificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57, பாசிசேல் வீதி, யாழ்ப்பாணம். 2990

# குழந்தைகள் மரணம் வருடாந்தம் 15 லட்சம்!

நியூயோர்க், யூலை 16

உலகில் ஐந்து வயதுக்குக் குறைந்த 15 லட்சம் குழந்தைகள் வருடாந்தம் இறக்கின்றன. இத் தகவலை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் குடிசனக் கணிப்பீட்டுப் பகுதி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் குடிசன கணிப்பீட்டுப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படியே இத்தகவல்கள் கிடைத்துள்ளன. இவற்றின்படி மொத்த இறப்புத் தொகையில் குழந்தைகளது பங்கு நாலில் ஒன்றாகும்.

2 குழந்தைகளுக்கு சிறந்த சுகாதார வசதிகள் அளிக்கப்படும் பட்சத்தில் 90 சதவீதமான குழந்தைகளின் இறப்புகளைத் தவிர்க்க முடியுமென இப்பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

மூன்றும் உலக நாடுகளிலேயே இவ்வாறான இறப்புகள் கூடுதலாகக் காணப்படுவதாயும், குழந்தைகளுக்கான நோய்கள் பெரும்பாலும் சுத்தமான நீர்வசதி கிடைக்காமையினாலேயே உண்டாகின்றதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## யாழ். நகரில் அமெரிக்க கூடைப்பந்தாட்டக் கோஷ்டி

[யாழ்ப்பாணம்]

'அமெரிக்கன் ஸ்போட்ஸ் அம்பசடர்' கூடைப்பந்தாட்ட கோஷ்டியொன்று, ஐந்து நாள் நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்தது.

இக்குழுவில் 15 அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் யாழ் மாவட்டத்தில் கூடைப்பந்தாட்டப்பயிற்சி, கருத்தரங்கு கூட்டங்கள் ஆகியவற்றை நடாத்துவர் யாழ். வை. எம். சி ஏ கத்தோலிக்க சங்கம் இவர்களது நிகழ்ச்சிகளை, வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஏற்பாடுசெய்துள்ளது.

நேற்று மாலை இக்குழுவினரது நிகழ்ச்சி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது. [...]

## நாவற்குழியில் / நாணுட்டானில் மண்டலாபிஷேக பூர்த்திவிழா

(மன்னார்)

நானாட்டான் செல்வமுத்து மாரியம்மன் கோயில் ஸ்ரீ சுப்பிரமணியர் மண்டலாபிஷேக பூர்த்திவிழா இம்மாதம் 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. [கு]

## புதிய கரபந்தாட்ட மைதானம்

(மட்டுவில்)

சாவகச்சேரி மகிழங்கேணியில் நாரசக்தி, தொழிலாளர் வதியுமிடத்தில் புதியதொரு கரபந்தாட்ட நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது

சாவகச்சேரி எம் பி திரு. வி. என் நவரத்தினத்தின் ஆதரவில் நிறுவப்பட்ட இந்த மைதானத்தை திரு. நவரத்தினம் மங்கள விளக்கேற்றி வைக்க ஜனாப் எம்.பி, ஈசீஸ் நாடாளவெட்டி திறந்து வைத்தார். [கு]

## விளையாட்டுப் போட்டி

[ஊரிகாவற்றுறை]

கருவில் ஶ்ரீ... கதலி ... தமிழ் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை மாலை அதிபர் திரு. வை தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

ஊரிகாவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. சடாட்சர சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து ... கல்வி அதிகாரி திரு ... ண ... சன் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்குவார் (கு)

## பண்ணிசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

[யாழ்ப்பாணம்]

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றுவரும் அகில இலங்கை சங்கீத வித்துவத் சபையினரின் பண்ணிசை சங்கீத கர்த்தாக்கள் விழாவின் நான்காம் நாளான இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு: பி. ப 5-00 மணி ஒலிபதிவுகள் மாலை 6-15 செல்வி ஜனதா இன்னப்பு பாட்டு செல்வி என். பாக்கியலட்சுமி, வயலின் திரு. ஏ. ரகுநாதன் மிருதங்கம் 7-00 திருமதி நாகேஸ்வரி பரமானந்தா பாட்டு, செல்வி என். பாக்கியலட்சுமி வயலின் திரு. ஏ. சந்தான கிருஷ்ணன் மிருதங்கம் இரவு 8-15 சொற்பொழிவு கலாநிதி ஏ. சண்முகதாஸ் 8-30 திரு. பொன் சுந்தரலிங்கம் பாட்டு திரு. வி கே உமாபசாமி வயலின் திரு எஸ். மகேந்திரன் மிருதங்கம் [கே-...]

## 'நுகர்வோர் சங்கங்கள் நியாயவர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவிக்கும்''

[புலோலி]

''நுகர்வோர் தமக்கு வேண்டிய நுகர்ச்சிப் பொருட்களைத் தட்டுப்பாடின்றியும், நீதான விலையில் ஒழுங்காகவும்பெற்று பொருளாதாரச் சுரண்டல்களில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே அரசாங்கம் நுகர்வோர் பாதுகாப்புச்சட்டத்தை அமுல்செய்துள்ளது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுவரும் நுகர்வோர் சங்கங்கள் நுகர்வோருக்கு வேண்டிய நுகர்ச்சிப்பொருட்கள் ஒழுங்காகக்கிடைப்பதற்கு வேண்டிய நியாயமான வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு வேண்டிய வழிவகைகளைக் கையாளும்.

பருத்தித்துறை நுகர்வோர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றிய யாழ். விலைக்கட்டுப்பாட்டு உதவி ஆணையாளர் திரு எஸ் வேல்முருகு குறிப்பிட்டார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தலைமையில் நடைபெற்ற இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தொடர்ந்து பேசிய வேல்முருகு குறிப்பிட்டதாவது:

''இந்நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் தனியார்வர்த்தகர்களை மாத்திரமன்றி, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள், சந்தைப்படுத்தும் திணைக்களங்கள் கூட்டுறவுக் கடைகள் ஆகியவற்றையும் கட்டுப்படுத்துகின்றது. எதுவித எதிர்ப்புமின்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தைப்போது மக்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்துவதற்காகவே சகல இடங்களிலும் நுகர்வோர்சங்கங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

இப்போது நடைமுறையிலுள்ள அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைகூட்டி விற்பது மாத்திரமன்றி குறைத்து விற்பதும் குற்றமாகக் கருதப்படும் நுகர்வோர்தாம் கொள்வனவுசெய்த பொருட்களின் பற்றுச்சீட்டை கேட்கும்போது அவர்களுக்குக் கட்டாயம் வழங்கவேண்டும், நுகர்வோர்பாதுகாப்புச் சட்டத்தை மீறும் வர்த்தகர்களுக்கு எழுத்து மூலஎச்சரிக்கையும் தொடர்ந்து ஆதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு வியாபார உத்தரவுப்பத்திரம் நீக்கப்படும் தண்டனைவரை வழங்க இச்சட்டம் இடமளிக்கின்றது.

பருத்தித்துறை நுகர்வோர் சங்கத்தின் தலைவராக என் ஏரம்பமூர்த்தியும், செயலாளராக சிவா சுருஸ்ணமூர்த்தியும், பொருளாளராக ஏ. என். எஸ் திருச்செல்வமும், நிர்வாகக்குழு உறுப்பினர்களாக இ. து, இரத்தினசிங்கம் இ. மகேசன், என் சிவபாதசுந்தரம் எஸ் சிவகுருநாதன், இரா பஞ்சலிங்கம், எஸ் குலவீரசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். [கு]

## 200 விண்ணப்பம்

[புலோலி]

பருத்தித்துறைத் தேர்தற் தொகுதியில் கட்டப்பட்டுள்ள 10 வீடுகளையும் பெற்றுக் கொள்ள 200 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதில் 32 விண்ணப்பதாரிகளே தகுதியுடையவர்களெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது இந்த 32 விண்ணப்பதாரிகளையும் மீண்டும் பரிசீலனைசெய்து தகுதியான 10 குடும்பங்களுக்கு இவ்வீடுகள் வழங்கப்படவுள்ளதாக வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை வேலும்மயிலும் தெரிவித்தார் இவ்வீடுகள் இம்மாதம் 21ம் திகதி சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்படும். [இ]

## நன்றி நவிலல்

கடந்த வெள்ளிக்கிழமை [13-7-79] இரவு எமமை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறையடி இணைந்த எமது அன்புத் தலைமகளும் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவியுமாகிய திருநிறை செல்வி ஹம்சாநந்தினியின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றிய யாழ். பல்கலைக்கழகத்தலைவர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவ மணிகள், யாழ். மருத்துவபீட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவமணிகள், அன்பர்கள், உற்றார் உறவினர்கள் மற்றும் அனுதாபச்செய்திகள் அனுப்பிய அன்பர்கள் அனைவருக்கும் எமது அன்பு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்

இங்ஙனம்

30, பழம் றோட், சுந்தர்மடம், யாழ்ப்பாணம்

நா. ஹரிஹரசர்மா, ஹ. தேவிபுவனேஸ்வரி.

3065

# சங்கச் செய்திகள்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை சைவப் புலவர் சங்க புதுவருட நிர்வாகிகள்:

பெருந் தலைவர்: சைவப்புலவர் வ செல்லையா, தலைவர்: சைவப்புலவர் திரு வ கந்தசாமி, பொதுச் செயலாளர்: சைவப்புலவர் திரு மு திருஞானசம்பந்தபிள்ளை, நிர்வாகச் செயலாளர்: சைவப்புலவர் திரு திருநாவுக்கரசு, பொருளாளர்: சைவ புலவர் திரு. நா கா தங்கரத்தினம், பரீட்சைச் செயலாளர்: சைவப் புலவர் திரு சி செல்லத்துரை. [கொ-கு]

### தாராபுரம் அல்மினா வித்தியாலயம்

தாராபுரம் அல்மினா மகா வித்தியாலய அபிவிருத்திச் சபை.

பாதுகாவலர்: பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம் ஷெரிப், தலைவர்: ஜனாப் எச் சித்திக் [அதிபர்], உப தலைவர்கள்: ஜனாப் எம் என் யூசுப், ஜனாப் எஸ் ஏ எஸ் ஏ சபூர், ஜனாப் கே எம் ரெட்ணம், பொதுச் செயலாளர்: ஜனாப் ஏ ஏ சுல்தான், உப செயலாளர்: ஜனாப் எம் எஸ் எம் சாலி, பொருளாளர் ஜனாப் எம் சி ஏ லத்தீவ், கணக்குப் பரிசோதகர்: ஜனாப் ஏ அமானுல்லா.

செயற்குழு உறுப்பினர்களாக எட்டுப்பேரும் தெரிவாகியுள்ளனர். [கா]

### மெய்கண்டான் வித்தியாலயம்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய அபிவிருத்திச் சங்கம்

தலைவர்: சி சிவமணி [வித்தியாலய அதிபர்], இணைச் செயலாளர்கள் ப திருநாவுக்கரசு, செல்வி இ தேசநாயகி, பொருளாளர் வி கனகேந்திரம் நிருவாக சபை உறுப்பினர்களாக தி கணபதிப்பிள்ளை, க மின் காந்தவேல், ச சதாசிவம், க சின்னத்தம்பி, மு கணபதிப்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். [கா-கு]

### வவுனியா ச ச நி சமாசம்

[வவுனியா]

வவுனியா மாவட்ட சனசமூக நிலைய சம்மேளனத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்: உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு வாமதேவன். தலைவர்: திரு க வேலுப்பிள்ளை, உப தலைவர்: திரு வீ இரத்தினராஜா, செயலாளர்: திரு தம பீற்றர் பொன்கலன்ட், உப செயலாளர்: திரு ச செல்வராஜா, பொருளாளர் திரு இ செல்லராஜா.

மற்றும் நான்கு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [கா]

### சைவப்பிரகாச வித்தியாலயம்

மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கம்

தலைவர்: வித்துவான் மு நவரத்தினம் [அதிபர்], காரியதரிசி எஸ் இராமலிங்கம், பொருளாளர்: க கனகசபை

பதினொருபேர் நிர்வாகசபை உறுப்பினராக தெரிவாகினர்.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

[புலோலி]

அகில இலங்கை ரீதியில் பருத்தித்துறை வர்த்தகர் விளையாட்டுச் சங்கம் உதைபந்தாட்ட [ஏழுபேரடங்கிய] சுற்றுப் போட்டியை நடாத்தவுள்ளது. [இ]

## மிளகாய்த் திருட்டு அதிகரிப்பு

[சுன்னாகம்]

வலிகாமம் மேற்குப் பகுதியில் அண்மைக் காலத்தில் மிளகாய் களவுகள் அதிகரித்துள்ளது

பட்டப்பகலில்காயப்போடும் மிளகாயையும் வீட்டில் வைத்திருக்கும் காய்ந்தமிளகாய்களையும் இனம்தெரியாத நபர்கள் திருடுகிறார்களாம் இதனால் விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர்

அண்மையில் வடலியடைப்பில் தம்பிப்பிள்ளை பாலசுந்தரம் என்பவருடைய மிளகாயை காயவைத்தபோது பட்டப்பகலில் யாரோ அள்ளிச்சென்றனராம் [கு]

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் வைத்தியலிங்கம்

திருமதி பாக்கியம் வைத்தியலிங்கம் காலமானார் இவர் காலம் சென்ற ஆசிரியர் பரமு வைத்தியலிங்கத்தின் அன்பு மனைவியும் சிவானுகூலம் (லண்டன்), கதிர்காமநாதன் (பொறியியலாளர் லண்டன்), பேரின்பநாயகம் (பொறியியலாளர் கொங்கொங்), இராமநாதன் (பொறியியலாளர் லண்டன்). கணேசநாதன் (மாணவன் லண்டன்), ஸ்ரீ ரங்கநாதன் (டென்மார்க்), ஜெகநாதன் (கட்டிட ஒப்பந்தக்காரர் புத்தளம்), குகலெட்சுமி, கோகிலலெட்சுமி காலஞ்சென்ற வள்ளாம்பிகை ஆகியோரின் அன்புத்தாயாரும், தேவதாசன் (கால்நடை வைத்தியசாலை யாழ்ப்பாணம்), கனகசபாபதி (முன்னாள் முகாமையாளர், மக்கள் வங்கி, சம்மாந்துறை), சண்முகராசா (ட்ரவல் ஏஜன்ட் கொழும்பு), இரவீந்திரா (M. E C. பல்குளம்), சௌந்திராதேவி, தேவிகா, இந்திராணி, விக்னேஸ்வரி கீத்தா ஆகியோரின் மாமியுமாவார். ஈமைக்கிரிகைகள் 19-7-79 வியாழக்கிழமை மாலை 4-00 மணியளவில் அரியாலை செம்மணிவீதி, 25ம் இலக்க இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரிகைகளுக்காக சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

3063

## ஆசிரிய இடமாற்றங்கள்:

# தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிக்கும் யோசனைகள்

(கொழும்பு)

இப்போது அமுலில் இருக்கும் ஆசிரியர்களின் இடமாற்றத்திட்டத்தை ஆராய்ந்து அறிக்கைசமர்ப்பிப்பதற்கு ஒரு ஆணைக்குழுவை நியமிக்க ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தன தீர்மானித்திருப்பது குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு பி எஸ். கே வணசிங்கா நன்றிதெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் விசாரணைக்கு உதவும் பொருட்டு பின்வரும் யோசனைகளையும் ஆலோசனைகளையும் திரு வணசிங்கா தெரிவித்துள்ளார்,

● அரசியல் அடிப்படையில் இடமாற்றங்கள் நிகழலாகாது. ஆசிரியர்கள் அரசியல் உரிமைகளை அனுபவித்து வருகிறார்கள். தமது பணியைப் பாதிக்காதவகையில் அரசியலில் ஈடுபடுவார்களானால் அவர்கள் தவறிழைத்தவர்கள் ஆகமாட்டார்கள்,

● அரசியல் பழிவாங்கல் மிகுதியும் இடம்பெற்றுள்ளன இவை தீர்வு காணப்படவேண்டும்;

● ஆசிரியர்களின் திடீர் இடமாற்றங்கள் காரணமாக மாணவர் மத்தியில் ஒழுங்கீனம் பெருமளவில் புகுந்துவிட்டது.

● நாம் மாவட்ட அடிப்படையிலான இடமாற்றங்களை வலியுறுத்துகின்றோம். ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் இருக்கும் மாவட்டங்களில் சாதாரண தர சித்தியுள்ளவர்களிடம் இருந்தும் தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவேண்டும்.

● ஒரு மாவட்டத்தில் இருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அல்லது அதேமாவட்டத்திலுள்ள கஷ்டப்பகுதிப் பாடசாலைக்கு ஆசிரியர்கள் மாற்றப்பட்டால் நான்கு வருடங்களின் பின்னர் அவர் தமது சொந்த ஊரிலுள்ள சொந்தப் பகுதிக்கு மாற்றப்படவேண்டும். இதனை அரசு உறுதிப்படுத்தவேண்டும்,

● கஷ்டப் பிரதேசங்களில் தொழில்புரியும் ஆசிரியர்கள்:

[அ] 3 ஆண்டுகளுக்குப் பிறகு மாற்றம் பெற வேண்டும்.

[ஆ] போனஸ் அல்லது சம்பள உயர்வு போன்ற ஏதாவது வழியில் ஊக்கமளிக்கப்படவேண் வேண்டும்,

[இ] விரைவாகப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

● சகல இடமாற்றங்களும் வருடத்தின் இறுதியில் நடைபெறவேண்டும் ஒழுங்கு நடவடிக்கையின்மீது தவிர வருடத்தின் இடை நடுவில் இடமாற்றம் செய்யலாகாது ஒழுங்கு நடவடிக்கையின்மீது ஒருவர இடமாற்றம் செய்யப்பட்டால் அவர்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து விசாரணை நடத்தி குற்றவாளியாகக் காணின் மாத்திரமே இடமாற்றம் செயற்படுத்தப் படவேண்டும்.

ஆணைக்குழுவின் முன் தோன்றி இதுகுறித்து விபரமாக கருத்து தெரிவிக்கவும் சங்கம் விரும்புவதாக திரு. வணசிங்கா தெரிவித்துள்ளார். [கா-அ]

---

## கிராமப்பாடசாலைகளில்

# ஆங்கிலம் நல்ல முறையில் போதிக்கப்படுவதில்லையாம்

(ஊர்காவற்றுறை)

"கிராமப் புறங்களில் உள்ள பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி நல்ல முறையில் போதிக்கப் படுவதில்லை. இதனால்தான் கிராமப்புற மாணவர்கள் ஆங்கில அறிவைப் பெற முடியாமலிருக்கிறது. ஆங்கில மொழியின் மேல் மாணவர்கள் கவனம் செலுத்தக் கூடிய வகையில் ஆங்கிலத்தினவிழாக்களை நடாத்துதல் அவசியம்.

இவ்வாறு கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஆங்கிலத் தின விழாவில் உரையாற்றிய வித்தியாலய அதிபர் திரு. தி. நடராசா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்: எமது பாடசாலையில் போதிய ஆங்கில ஆசிரியர்கள் இருப்பதால் மாணவர்கள் ஆங்கில அறிவை நல்ல முறையில் பெறக் கூடியதாவுள்ளது. சகல மாணவர்களும் இன்றைய நிகழ்ச்சிகளின் போது ஆங்கிலத்தை நல்ல முறையில் உச்சரித்ததை பாராட்டவேண்டும் என்றார்.

இவ்விழா ஆங்கில ஆசிரியர் திரு. எஸ். மனுவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. [கு]

---

## மேலைக்கரம்பன் முருகன் உற்சவம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கரம்பன் மேற்கு முருகமூர்த்திகோவில் வருடாந்த உற்சவம் கடந்த 14ம் திகதிசனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இம்மாதம் 21ம் திகதி வேட்டைத் திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

தினமும் இரவு இவர் தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 'முருகன் அருள்' பற்றி சமயச் சொற்பொழிவு நிகழ்த்திவருகிறார் [கு]

---

## இன்று நினைவு தினம்

# ஈழத்தின் முதல்தமிழ் ஆயர் அதிவந்.எமிலியானுஸ்பிள்ளை

அண்மைக் காலத்தில் இலங்கையில் தமிழும் கத்தோலிக்கமும் வளர்த்தவர்களில் அமரராகிவிட்ட யாழ் ஆயர் அதி. வந். டாக்டர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை முக்கிய இடம் வகிக்கின்றார்.

ஈழத்தின் முதலாவது தமிழ் ஆயர் என்ற பெருமையைப் பெற்ற அதி. வந். டாக்டர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் நினைவு தினம் இன்று [17-7-79] ஆகும். 1950ம் ஆண்டு ஜூலை மாதம் 18ம் திகதி ஆயராகப் பெரும் பொறுப்பை ஏற்ற இவரது

### எம். சுபேந்திரன்

குடும்பமே ஈழத்தின் பிரதான பல பொறுப்புகளை முதலாவதாக வகித்துப் புகழ்ட்டிச் சாதனை நிலைநாட்டியுள்ளது.

மறைந்த ஆயர் யாழ்.மறை மாவட்டத்தில் கொழும்புத் துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் முதற் குரு அதிபராகவும், கத்தோலிக்கப்பாடசாலைகளின் பொதுமுகாமையாளராகவும், மேற்றிராசனப் பரிபாலகராகவும் பதவி வகித்த முதலாவது இலங்கையராவார். அத்தோடு ஈழத்து முதலாவது தமிழ் ஆயர் என்ற பெருமையையும் பெற்றவர். அவரது சகோதரர் ஸ்ரனிஸ்லாஸ் இலங்கை அரசாங்கத்தில் நீதியமைச்சு ஆலோசகராகவும் உதவிக்கணக்காளராகவும் கடமையாற்றிய முதலாவது இலங்கையராவார். மற்றொரு சகோதரரான பிறதர் லூக் புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி அதிபராகவும், கிறிஸ்ரியன் சகோதரத்துவ சபையின் சிரேஷ்டராகவும் பணியாற்றிய முதல் இலங்கையர்.

அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர் சபையை வடபகுதியில் வித்திட்டு வளர்த்தபெருமையும் எமது எமில் ஆண்டகையையேசாரும் அச்சுவேலியில் சென். திரேசா கன்னியர் மடத்தில் முதன் முதலாகத் தமது சபைக் கன்னியரைச் சேவைக்கமர்த்திய கார்மேல் சபை இவருடைய மறைப் பரிபாலன காலத்திலேயேயாகும். மேலும் மூன்று இடங்களில் இக்கார்மேல்சபையினர் தமது இல்லங்களை ஸ்தாபித்துக் கத்தோலிக்கப் பணியாற்றி வருகின்றனர். 'எமில்' ஆண்டகையின் அயராத முயற்சியின் காரணமாக கார்மேல் சபையின் கன்னியர் தொகை அதிகரித்து இன்று பெரும் ஸ்தாபனமாக விளங்கி வருகின்றது.

இன்று மடுத்திருப்பதியின் உன்னத நிலைக்கும் வளர்ச்சிக்கும் காரணமாயிருந்தவர் எமில் ஆண்டகையே. அவருடைய காலத்தில் மடுத்திருப்பதியின் திருவிழாக்கள் புதுப்பொலிவு பெற்று சகல சமயத்தவர்களையும் தரிசிக்க வைத்தன.

இந்து-கத்தோலிக்க நல்லுறவை வளர்த்துத் தமிழ் வளர்த்த எமில் ஆண்டகை ஒரு சமயம் திருக்கேதீஸ்வரத்தில் காணிப் பிரச்சனையொன்று சம்பந்தமாக சேர் கந்தையா வைத்தியநாதனுக்கும், கத்தோலிக்க மக்களுக்கும் இடையே பிணக்கு ஏற்பட்டபோது இப்பிரச்னையை நீதிமன்றம்வரை செல்லவிடாது தமது தலையீட்டால் சமரசம் ஏற்படுத்தி சுமாதானமாக இப்பிரச்னையைத் தீர்த்து சைவப் பெரியார்களினதும் பொதுமக்களினதும் அன்பைச் சம்பாதித்துக் கொண்டார்.

மறைந்த ஆண்டகை இலட்சியத்திற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து சுபரச சன்மார்க்க நெறியைத் தமது வாழ்வு மூலம் முன்மாதிரி காட்டி இயேசுக் கிறீஸ்து நாதரின் திருவடிகளில் தம்மைச் சமர்ப்பணம் செய்து தியாக ஒளியாக விளங்குகின்றார் [அ]

---

## மக்கள் கருத்து

### கட்டிடத்தை இடிக்கும் பஸ்கள்

நெல்லியடி பஸ்தரிப்பு நிலையக் கட்டிடம் பஸ்வண்டிகளால் இடித்து நொறுக்கப்படுகின்றது. ஒருமுறைக்குப் பலமுறை இக் கட்டிடத்தின் மூலைப்பகுதிகள் பஸ்வண்டிகளால் நொருக்கப்பட்ட நிலையில்; பஸ் தரிப்பு நிலையக் கட்டிடத்தில் பொருத்தப்பட்ட கம்பிகள் தலைகளை நீட்டிய வண்ணம் காட்சியளிக்கின்றன,

பல்லாயிரம் ரூபா செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடத்தை பஸ்வண்டிகள் இடிப்பதற்குக்காரணம்சாரதிகளின் கவனக்குறைவுதான் எனப் பேசிக் கொள்ளப்படுகின்றது.

தொடர்ந்து, வரும் காலத்திலும் இக்கட்டிடம் பஸ்வண்டிகளால் இடிக்கப்படாமலிருக்க இ. போ. ச. டிப்போ நிர்வாகிகள் கவனமெடுப்பார்களா?

ஆ. சிவஞானம்
நெல்லியடி

0 0 0

### கால் நடைகளின் தாகம் தீர்க்கப்படுமா?

துன்னாலைக்கும் வரணிக்கும் இடைப்பட்ட புற்றரைகளுக்கு அயலூரில் உள்ள கால் நடைகள் யாவும் வந்து மேய்கின்றன, இவைகளின் தண்ணீர்த் தேவையின் பொருட்டு பல இடங்களில் சிறு குளங்கள் தோண்டப்பட்டுள்ளன. இக் குளங்களை இதுவரை காலமும் கிராமசபை பேணி வந்தது. ஆனால் இப்பொழுது கிராம சபைகள் கலைக்கப்பட்டுள்ளன. குளங்களும் தூர்ந்து போய் உள்ளன ஆகவே இவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் வாயில்லாப் பிராணிகள் மீது இரக்கம்காட்டி வருடாவருடம் நடைமுறையில் இருந்து வரும் இச் சேவையைச் செய்து கால் நடைகளின் தாகம் தீர்ப்பார்களா?

எஸ். சிவானந்தராஜா
துன்னாலை தெற்கு
கரவெட்டி

0 0 0

### வாசகர் கஷ்டம் நீங்கியது

'ஈழநாடு' செய்தி கைமேல் பலன் அளித்துள்ளது. கடந்த 5ம் திகதி ஈழநாடு பத்திரிகையில் 'நெல்லியடி நூல் நிலையத்தில் வாசகர் கஷ்டம்' என்னும் தலைப்பில் மக்கள் கருத்து வெளியாகி இருந்தது வாசகர் அறிந்ததே.

பிரஸ்தாப வாசகர் கருத்தில் இந்நூல் நிலையத்தில் தரமான வார, மாத சஞ்சிகைகளோ, வெளியீடுகளோ இல்லாமல் இருப்பது பெருங்குறையாகவுள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து நெல்லியடிப் பட்டினசபைச் செயலாளர் திரு. வ. இராமச்சந்திரன் உடனடியாக நெல்லியடிப் பொது நூல்நிலையத்தில் சகல வார மாத சஞ்சிகைகளை இவ் வாரம் முதல் இடம்பெறச் செய்துள்ளார்.

இதன் பயனாக வாசகர்கள் 'ஈழநாட்டு'க்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

— வாசகன்

---

### கிராம அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணம்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் கிழக்கு கிராம அபிவிருத்திச்சபை அங்குரார்ப்பணக்கூட்டம் இம்மாதம் 20ம் திகதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அ. விஜயநாதன் தலைமையில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு எதிரேயுள்ள கல்விநிலையத்தில் நடைபெறுமென அகில இலங்கை நெய்தல் மாதிரு நல்விருத்திச் சங்க கொக்குவில்கிளைத் தலைவர் அறிவித்துள்ளார். [புலோ. அ]

---

## "ச. ச. நிலையங்கள் மூலம் அரசு

# நாட்டின் அபிவிருத்தியை மேற்கொள்ளவுள்ளது"

(புலோலி)

"தற்போதைய அரசாங்கம் சனசமூக நிலையங்களுக்கு புத்துயிரளித்து அதன்மூலம் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது".

இவ்வாறு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களின் ஒருங்கிணைப்புக்குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய உதவிஅரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "அரசாங்கம் செய்யும் உதவிகளுடன் இந்நிலையங்கள் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமது நாட்டை அபிவிருத்தி அடையச்செய்வது எமது தலையாய கடமையாகும்" என்றார்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் செயலாளர் திரு. எம். செல்லராசா உரையாற்றுகையில் கூறியதாவது:

"சனசமூக நிலையங்களுக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன், அவற்றின் வளர்ச்சிக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அரசாங்கம் பல புதிய திட்டங்களை வகுத்துள்ளது. நாட்டின்அபிவிருத்தியில் சனசமூகநிலையங்கள் முக்கிய பங்கெடுப்பதனால் நாம் அதிக நன்மையைப்பெற முடியும். எனவேதான் சனசமூக நிலையங்களின் வளர்ச்சியில் எமது பிரதமரும், உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு ஆர். பிரேமதாச அதிக அக்கறை காட்டிவருகிறார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 16 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் சனசமூகநிலையங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்கள்தெரிவுசெய்யப்படும் பின்னர் இக்குழுக்களைக் கொண்டு யாழ் மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாசம் அமைக்கப்படும் இச்சமா

[4ம் பக்கம் பார்க்க]

# சரண்சிங், ஜெகஜீவன், ராஜ்நாராயண்: இந்தியப்பிரதமராக முயற்சி!

புதுடில்லி, ஜூலை 16
இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளதை அடுத்து இந்திய துணைப்பிரதமர்களான திரு ஜெகஜீவன்ராம், திரு. சரண்சிங் ஆகியோருடன் முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. ராஜ்நாராயணனும் இந்தியாவின் பிரதமர் பதவியைக் கைப்பற்ற முயற்சிகள் மேற் கொண்டு வருகின்றனர்.

அரசு அமைக்கும் யோசனை குறித்து முதலில் தம்முடனேயே தொடர்பு கொள்ளுமாறு பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், ஜனாதிபதி திரு சஞ்சீவரெட்டியிடம் நேற்று கூறியிருந்தார்

### ஜெகஜீவனின் இல்லத்தில்

இதேவேளையில் திரு. ஜெகஜீவன்ராமின் இல்லத்தில் கடந்த இரவு ஆதரவாளர்களும் பல ஜனதா கட்சி எம். பிக்களும் கூடி எதிர்காலம்பற்றி விரிவாக ஆராய்ந்தனர்.

### சரண்சிங் இல்லத்திலும்

திரு. சரண்சிங்கின் இல்லத்திலும் கடந்த இரவு நீண்ட நேரமாக ஆதரவாளர்களும் எம். பிக்களும் கூடி அரசியல் நிலைகுறித்து ஆராய்ந்தனர்

காஷ்மீர் முதல் மந்திரி ஜனாப் ஷேக் அப்துல்லாவும் சில இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் இன்று காலை திரு. சரண்சிங் இல்லத்தில் கூடி அவருடன் உரையாடினார்கள்.

## யாழ். மாநகரசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)
கடந்தவாரம் ஒத்திவைக்கப்பட்ட யாழ் மாநகரசபைக் கூட்டம் இன்று மாலை நகர முதல்வர் திரு ஆர். விஸ்வநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் 50 பிரேரணைகள் பிரேரிக்கப்படவிருக்கின்றன. [ச-வி]

## இந்திராவின் சர்வாதிகார அமைப்பு ஆட்சிக்கு வந்தால்

### மார்க். கம்யூ. ஆதரிக்காது

### நம்பூதிரிபாத் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 16
முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் தலைமையிலான சர்வாதிகார அமைப்பு ஆட்சிக்கு வருமானால் இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு ஆதரவளிக்கமாட்டாது.

இவ்வாறு மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் தெரிவித்துள்ளார்.

வகுப்புவாத சக்திகள் ஆட்சிக்கு வந்தாலும் தமது கட்சி ஆதரவு அளிக்கமாட்டாது என்றும் திரு. நம்பூதிரிபாத் தெரிவித்தார். [இ]

## மத்தியில் ஆட்சி அமைக்க தமக்கும் பலம் உண்டாம்

### ராஜ்நாராயண் ஜனாதிபதிக்கு கடிதம்

புதுடில்லி, ஜூலை. 16
மத்தியில் ஆட்சியை அமைக்க தமது கட்சிக்குப் போதிய பலம் உண்டு என ஜனதா கட்சியிலிருந்து பிரிந்து சென்று புதிய கட்சியை அமைத்துக் கொண்ட முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. ராஜ்நாராயண் ஜனாதிபதி திரு. சஞ்சீவரெட்டிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்

இந்திய லோகசபையில் தமது கட்சிக்கு 275 எம்.பிக்களின் ஆதரவு உண்டு என்றும் திரு. ராஜ்நாராயண் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தமது கட்சிக்கு ஆதரவளிப்பார்கள் என்றும் திரு. நாராயண் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ)

## தேசிய அரசு அமைக்கப்பட வேண்டும்

சென்னை, ஜூலை 16
இந்தியாவில் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயின் ராஜினாமாவை அடுத்து எழுந்துவரும் நிலைமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உத்தேச தேசிய அரசாங்கத்தில் சகல தேசியக்கட்சிகளும் அங்கம்வகிக்கவேண்டும் என்றும் தேசிய அரசு அமைக்காவிடின் உடனடியாக தேர்தலை நடத்தவேண்டும் என்றும் திரு எம் ஜி இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனதா அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது அரசு ஆதரவாக வாக்களிப்பது என்று எம். ஜி ஆரின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானித்திருந்தது தெரிந்ததே. [இ]

## 'நந்தாதேவி' கடலில் மூழ்கியது!

புதுடில்லி, ஜூலை 16
இந்தியாவின் சரக்குக் கப்பலான 'நந்தாதேவி' கராச்சிக்கு அண்மையில் கடலில் மூழ்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டது

இந்தியாவிலிருந்து ஈராக்குக்குச் சென்று கொண்டிருந்த இக்கப்பல் கராச்சி துறைமுகத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் நீரில் மூழ்கியது.

கப்பலிலிருந்த 29 மாலுமிகளும் மீட்கப்பட்டுவிட்டனர் என கப்பல் காப்டன் தெரிவித்தார். [இ]

## மேலதிகநேர ஊதியம் கோருகின்றனர்

[வண்ணார்பண்ணை]
"கடமை நேரத்திற்கு மேல் அரசாங்க செயலகத்தை மாலையில் பூட்டியும், காலையில் திறந்தும் கடமை செய்யும் ஊழியர்களுக்கு உரிய முறையில் மேலதிக நேர ஊதியம் வழங்க வேண்டும் என்று அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது.

இதுதொடர்பாக யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. ஜெகநாதனுடன் இச்சங்க உறுப்பினர்கள் பேச்சு வார்த்தை ஒன்றை நடத்தியுள்ளனர். [கு]

## பணயக் கைதிகள் விடுதலை!

[அங்காரா]
அங்காராவில் கடந்த வெள்ளிக்கிழமை பாலஸ்தீனக் கொரில்லாக்களால் பணயம் வைக்கப்பட்டிருந்த எகிப்திய தூதுவரும், தூதுவராலய உத்தியோகத்தர்களும் விடுதலை செய்யப்பட்டு பாலஸ்தீனக் கொரில்லாக்கள் நால்வரும் சரணடைந்தனர். [இ]

## பள்ளிவாசலில் குண்டுவீச்சு: 3 பேர் சுட்டுக் கொலை!

தெஹ்ரான், ஜூலை 16
ஈரானில் பள்ளிவாசல் ஒன்றில் கடந்தவாரம் இடம் பெற்ற குண்டுவீச்சுக்கு காரணமாக இருந்த 3 பேருக்கு இஸ்லாமிய புரட்சி நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது

இஸ்லாமிய புரட்சி நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் இவர்கள் மூவரும் சுட்டுக் கொலைசெய்யப்பட்டனர்.

கடந்த வாரம் பள்ளிவாசலில் இடம்பெற்ற குண்டுவீச்சு சம்பவத்தில் அரசு ஆதரவாளர்கள் ஆறுபேர் பலியாகினர் 60 பேர் காயமடைந்தனர். [இ]

## குருவாகத் திருநிலைப் படுத்தப்படுவார்

(உடுப்பிட்டி)
சில்லாலையைச் சேர்ந்த மொன் பொஸ் எதிர்வரும் 19ம் திகதி யாழ். ஆயர், அதிவந். பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் சில்லாலை புனித மரியாள் ஆலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப் படுவார்.

இவர் சென்னையிலுள்ள திருஇருதயக் குருத்துவக் கல்லூரியில் மெய்யியலும் கண்டியிலுள்ள தேசியக் குருத்துவக் கல்லூரியில் இறையியலும் பயின்றார். (உ)

## நாட்டின்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
சத்திற்கு அரசாங்க அதிபர் தலைவராகவும், சகல உதவி அரசாங்க அதிபர்களும் உபதலைவர்களாகவும் இருப்பார்கள். அவ்வப்பகுதி சனசமூக நிலையங்களின் பிரச்னைகள் இச்சமாசத்தின் மூலம் நீக்கப்பட்டு மக்கள் தேவைகள் நிறைவேற்றப்பட்டு நாட்டின் அபிவிருத்தி மேற்கொள்ளப் படும்''

இதனையடுத்து நடைபெற்ற உத்தியோகத்தர் தெரிவில் உதவி அரசாங்க அதிபர் திரு. வை வேலும்மயிலும் தலைவராகவும், ப. இராஜேஸ்வரன், செயலாளராகவும், திரு எஸ். கணேசமூர்த்தி பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (கு)


# வொலரோன் ஈ. சீ. 50%

வொலரோன் ஒரு சர்வபூச்சி நாசினி. மிளகாய், வெங்காயம் மற்றும் காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் தத்துவெட்டி, வெட்டுப்புழு முதலாம் சகல தரைப் பூச்சி புழுக்களையும் ஒழித்துக்கட்டும், மிளகாய், வெங்காயப் பயிர்க் கம்பளப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதில் விசேஷ சக்தி வாய்ந்தது வொலரோன்.

பாவியுங்கள்
BAYER
தரமான பீடைநாசினிகள்




ஹேக்கெம் லிமிட்டெட்
400, டேம் வீதி, கொழும்பு 10
தொலைபேசி: 93563, 96334-6

Mel Ads

**நாகம்மாள்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி, சாவித்திரி
**காத்தவராயன்**

**வெஸ்லி**
கரவெட்டி
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம் ஜி ஆர் - பானுமதி
**மதுரை வீரன்**

கொட்டகை நிறைந்த 6-வது வாரம்
**REGAL** Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
**Mountain In The Jungle**
Color — Scope — Adults
இளைஞர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

**வெலிங்டன்** தினசரி 10-30, 2-30, 6-30, & 9-45.
(யாழ்ப்பாணம்)
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
**ஒளவையார்**

**லிடோ** போன் 7693 தினசரி 4 காட்சிகள்
யாழ் நகர்
**கல்யாணபரிசு**
(புதிய பிரதி)

2nd Crowded week!
**SHANTHI** JAFFNA Phone: 7642
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 P.M.
CHARLES BRONSON in
**Mr. MAJESTYK-**
Adults - Action Packed - Color
நீங்கள் என்றும் கண்டிராத பரபரப்பையூட்டும் பயங்கர கார் ஓட்டங்கள், திகிலூட்டும் துப்பாக்கி வேட்டுகள், மயிர்க்கூச்செறியும் சண்டைக் காட்சிகள் நிறைந்த அற்புத அதிசிறந்த திரை ஓவியம்.

4-வது வாரம்
**ராணி** தினசரி 4 காட்சிகள் (யாழ். நகர்)
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
**உலகம் சுற்றும் வாலிபன்**
கொட்டகை நிறைந்த காட்சி

இன்று மட்டும்
**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
**The God Father**

**மனோகரா** 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
**நீ ஒரு மகாராணி**

93வது தினம். (கடைசி சில தினங்கள் மட்டும்)
**ராஜா** தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா நடித்த
**ஒளிவிளக்கு**
புதிய பிரதி ஈஸ்ட்மன் கலர்

**இன்று 200-வது நாள்**
**வின்சர்** போன்: 466
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)


## பரு. சிறைக்கூடத்திலிருந்து கொலைச்சந்தேகநபர் தப்பி ஓடினார்

(புலோலி)

பருத்தித்துறைச் சிறைக் கூடத்திலிருந்து, கொலைக்குற்றம் சம்பந்தமாகச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவர் தப்பியோடிவிட்டார்.

நேசராசா அல்லது "இன்னடப்பி" என்றழைக்கப்படும் இச் சந்தேகநபர் அண்மையில் கெருடாவில் என்னுமிடத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் காலமான இராமலிங்கம் என்பவரின் கொலைவழக்கின் முதலாவது சந்தேகநபராவார்.

தப்பியோடிய சந்தேகநபர் சிறுநீர் கழிப்பதற்காகக் கதவைத்திறக்கும்படி சிறைச்சாலை உத்தியோகத்தரைக் கேட்டபோது அவர் கதவைத் திறந்துவிட்ட பின்னர் மீண்டும் அவரை உள்ளே அனுமதிக்கும் பொழுது உத்தியோகஸ்தரைத் தள்ளிவிழுத்திவிட்டு, ஓடித் தப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமான விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பொலிசார் இச்சந்தேக நபரைக்கைதுசெய்வதற்காக வலை விசியுள்ளனர். [அ]

## இன்றைய பலன்

ஆடி மாதம் 1-ம் திகதி
(செவ்வாய்க்கிழமை)
(17-7-1979)

**மேடம்:** பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது விரும்பத்தக்கது, அவசரமுடிவின் மூலம் விரோதத்தைத் தேடிக்கொள்ளுவீர்கள், துதிபாடிக்கொண்டே சிலர் துரோகச்செயலில் ஈடுபடுவார்கள்.

**இடபம்:** ஊதியம் வளரும், உற்சாகம் பெருகும், உறவினர் வாழ்த்தும் இதயத்தில் இனிமை சேர்க்கும், புனிதம் ஒன்று செவிகளில் வந்துமோதும்.

**மிதுனம்:** சகோதரவழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும், உள் வீட்டிலேயே பூசல் தலைதூக்கும், உஷாராக இரு.

**கடகம்:** தாய் வழியாற் பெருமைகள் சேரும், தனத்துடன் வாழ்வும் கிடைக்கும், எதிரிகள் கூட உங்களை வரவேற்பார்கள், மருத்துவத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று மகத்தான தினம்.

**சிங்கம்:** இதயக் கலைம் இல்லாதால் மலரும், இல்லத்தில் பிணைப்புகள் இறுகும், கடமையில் புதியஆர்வம் பிறக்கும், கற்றதனால் பயனும் கிடைக்கும்.

**கன்னி:** எவ்வளவு திறமைசாலியாக இருந்தபோதிலும் இன்று கோட்டைவிட நேரிடலாம், முகமன் பேசுபவர்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், சும்மா இருப்பதே சுகம்.

**துலாம்:** காதலர்களுக்கு சந்தோஷமான தினம், குடும்பஸ்தர்கள் வாழ்வில் குதூகலம் தென்படும், உறவினர்கள் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும், பெற்றோர்களின் ஆசியும் தப்பாமல் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், திருட்டுபயத்துக்கு இடமுண்டு, இனிக்கப் பேசுபவர்களை நம்ப வேண்டாம், கடமையில் அதிக கவனம் செலுத்தவும், துயர் படிந்தநாள்.

**தனுசு:** விளையாட்டுப் பிள்ளையாக இருக்க விரும்புவீர் உமது விசித்திரப்போக்குமற்றவர்களுக்கு வேடிக்கையைத் தரலாம், சமயோசிதபுத்தி நன்மையைத்தரும், இன்று நீர் கவலையில்லாத மனிதன்.

**மகரம்:** எதிர்காலம் பிரகாசமடைய இன்று நடவடிக்கைகள் எடுக்கப்படும், தொழில் துறையில் மனத்துக்கு ஏற்ற வண்ணம் மாற்றங்கள் இடம்பெறும். முன்னாள் மேலதிகாரி ஒருவர் உங்கள் வெற்றிக்குத் துணை நிற்பார்.

**கும்பம்:** புதிய வழிகள் மூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு, சிலருக்குப் பதவியுயர்வும் கிடைக்கலாம், குடும்பத்தில் இனிமை தவழும், பிள்ளைகளின் கல்வியில் அதிககவனம் செலுத்தும் நல்லநாள்.

**மீனம்:** மனதில் விரக்தி நிலை தென்படும், உடல்நலமும் பாதிக்கப்படலாம், கால்நடைகளினால் நஷ்டமேற்படும், பூமிப் பிணக்குகளின் மூலம் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக் கொள்ள நேரிடலாம்.

சோதிடக்கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

## பெற்றோர்தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய பெற்றோர் தினமும், பரிசளிப்பு விழாவும், நாளை மறுதினம், வியாழக்கிழமை மாலை, கல்லூரி அதிபர் திரு. மு. நல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். கோப்பாய் எம். பி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தம்பராசா உதவி அரசாங்க அதிபர் திரு. இ. அம்பலவாணர், கிராமசபை விசேட ஆணையாளர், திரு. ஜெ எஸ். ஆனந்தம், முன்னாள் அதிபர் திரு. வி எஸ். சுந்தரலிங்கம், திரு. க. இ. குமாரசாமி ஆகியோர் சிறப்புரையாற்றுவர். பரிசில்களை திருமதி ஞா. மாணிக்கவாசகர் வழங்குவார். கலைநிகழ்ச்சிகளும் நாடகமும் இடம்பெறும். (செ-கு)

## தவறணை தீக்கிரை

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி கள்ளுத்தவறணை இரவுநேரத்தில் இனந்தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப் பட்டுள்ளது.

தேவ்விளம்பழ தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கக் கிளை நிலையமான இத்தவறணை தீக்கிரையாக்கப் பட்டதன்மூலம் 2000 ரூபா நஷ்டம் விளைவிக்கப்பட்டுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிஸில் இது குறித்து எஸ். முருகையா என்பவர் செய்துள்ள புகாரில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர். [அ]

## புலிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!

பம்பாய், ஜூலை, 16

மகாராஷ்டிர மாநிலத்தில் புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதென வனவிலங்கு திணைக்களம் அறிவித்துள்ளது

1976ம் ஆண்டு 155 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை இப்போது 225 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [இ]

## நெல்லியடி ம. ம. வி. இல்லப்போட்டி

(உடுப்பிட்டி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி மகா வித்தியாலய அதிபர் திரு கே. குணரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இவ் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். கல்வித்திணைக்களப் பொறியியலாளர் திரு. எஸ். செல்வராசா கலந்துகொண்டார். பரிசில்களை திருமதி. செல்வராசா வழங்கினார். [அ]

## மயிலிட்டி வலைகள் தாளையடியில் மீட்பு

(மாவிட்டபுரம்)

மயிலிட்டியில் களவாடப்பட்டுத் தாளையடிக்குக் கடத்திச் செல்லப்பட்ட 4000 ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் காங்கேசன்துறைப் பொலிசாரினால் மீட்கப்பட்டுள்ளன.

மயிலிட்டியைச் சேர்ந்த கே. கைலைநாதன் என்பவரது 4000 ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் திருட்டுப் போனதை யடுத்து காங்கேசன்துறை பொலிசில் அவர் புகார் செய்திருந்தார்.

இதுதொடர்பாக விசாரணையிலீடுபட்ட காங்கேசன்துறைப் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு இன்ஸ்பெக்டர் திரு இலியாஸ் தலைமையிலான பொலிஸ்கோஷ்டி தாளையடியில் வைத்து மேற்படி வலைகளை மீட்டுள்ளது.

இது தொடர்பாக சில நபர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டதுடன் மேலும் சிலரை பொலிசார் தேடிவருகின்றனர். [அ]

## வல்வையில் நுகர்வோர் சங்கம்

(புலோலி)

வல்வெட்டித்துறைக்கு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நுகர்வோர் சங்கத்தை யாழ். விலைக்கட்டுப்பாட்டு உதவிஆணையாளர் திரு. கே. எஸ் வேல்முருகு அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளார். இவ்வங்குரார்ப்பண கூட்டத்திற்குப் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தலைமைவகித்தார்.

சங்கத் தலைவராக நா. அ. இராசேந்திரனும் செயலாளராக செ. தம்பிராசாவும், பொருளாளராக இ. சிவநாதனும், செயற்குழு உறுப்பினர்களாக வி. விவேகானந்தன், சி. அம்பலவாணர், க. வேதநாயகம், இ. நவரத்தினம் ச. கணேசலிங்கம், ந. மயில்வாகனம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். [அ]

## தற்காலிக பொலிஸ் நிலையம்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு மாவிட்டபுரத்தில் தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் திரு இலியாஸ் தலைமையில் இயங்கும் இந்நிலையம், மாவை ஆலய உற்சவத்தில் கூடும் பக்தர்களின் பாதுகாப்பு போக்குவரத்து ஒழுங்குகள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. [அ]

## யாருடையது?

கொக்குவில் கிராம சபை ஊழியர் திரு பாலகிருஷ்ணன் தாவடிப் பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் கண்டெடுக்கப்பட்ட மூக்குக்கண்ணாடி ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (க)

## "பாடசாலைகளில் மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வுகள் பாரபட்சம் இருக்கக்கூடாது"

[யாழ்ப்பாணம்]

"ஆசிரியன் புதிய புதிய கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருக்கவேண்டும். தமது அறிவை நாளுக்குநாள் வளர்க்கவேண்டும்."

இவ்வாறு குரும்பசிட்டி பொன் பரமானந்த வித்தியாசாலையில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவில் வடமாநில கல்வி அதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் பேசுகையில் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். கனகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவில் திரு மாணிக்கவாசகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

ஆசிரியர்கள் கல்வி கற்பதில் அக்கறையாக இருக்கவேண்டும். மாணவர்கள் கல்வி கற்பதிலும் நல்லொழுக்கத்திலும் முன்னணியில் திகழ்ந்து தாம் கற்ற பாடசாலைக்கு பெருமைதேடிக் கொடுக்க வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை உடையவர்களாக இருப்பதுடன் பாடசாலைகளின் குறைநிறைகளிலும்பாடசாலைகளின் வளர்ச்சியிலும் அக்கறைகாட்ட முன்வரவேண்டும்.

டாக்டர்கள், பொறியியலாளர்கள், சட்ட வல்லுனர்கள் போன்ற அறிவாளிகளைத் தோற்றுவிக்கும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கிடையில் எதுவித பாரபட்சமும் ஏற்றத்தாழ்வுகளும் இருக்கக்கூடாது.

நல்ல அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் பிறப்பிடமாகக்கொண்ட குரும்பசிட்டியில் வாழும் மாணவர்களும் ஒழுக்கசீலர்களாக வாழ்ந்து முன்னோர்கள் தேடிவைத்த பெருமையைப் பாதுகாத்து தங்களின்பெருமையையும் நிலைநாட்டவேண்டும்.

மாணவர்களுக்கு திருமதி ஞானம்பிகை மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்கினார்.

நடன ஆசிரியை செல்வி ரேலங்கி செல்லையாவினால் நெறிப்படுத்தப்பட்ட நாட்டிய நிகழ்ச்சியும் நாடகங்களும் இடம்பெற்றன. [கோ-கு]

## செயற்கை எரிபொருள்! ஜப்பான் திட்டம்

டோக்கியோ, ஜூலை 16

எண்ணை நெருக்கடிக்கு எதிராக செயற்கை எரிபொருளைத் தயாரிக்கும் பாரிய திட்டம் ஒன்றை ஜப்பான் மேற்கொண்டுவருகிறது.

இத் திட்டத்திற்கமைய 1990ம் ஆண்டில் 4 கோடி கிலோ லீட்டர் எரிபொருளை உற்பத்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது நிலக்கரி, சூரியசக்தி, புவிஅனல் சக்தி ஆகியவற்றிலிருந்து இந்த செயற்கை எரிபொருள் தயாரிக்கப்படவுள்ளது என ஜப்பானிய விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார். [இ]

# பெருந் தலைவர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திராகாந்தியும் அரசாங்கம் அமைக்க முயற்சித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திரா காங்கிரசின் பாராளுமன்றக்குழு நேற்றுக் காலை நீண்டநேரம் வரை விவாதித்தது.

மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் ராஷ்டிரபதி சஞ்சீவரெட்டியைச் சந்தித்து கட்சி நிலைமை பற்றி உரையாடினர்.

### ஜெகஜீவன்ராம் பிரதமராகலாம்

நிலைமைகள் இவ்வாறு இருந்தபோதிலும், பிரதிப் பிரதமர் திரு. ஜெகஜீவன்ராமைப் பிரதமராக நியமிக்க கடும் முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. ஜனதாவிலிருந்தும், அமைச்சரவையிலிருந்தும் இன்னும் வெளியேறாத திரு. ஜெகஜீவன்ராமுக்கே ஓரளவு செல்வாக்கு இருந்துவருவதாகப் புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### காபந்துப் பிரதமர்

நேற்று முன்தினம் தமது பிரதமர் பதவியை ராஜினாமாச்செய்த திரு மொரார்ஜி தேசாய், இப்பொழுது காபந்துப் பிரதமராக இருக்கிறார். புதிய பிரதமர் நியமிக்கப்படும்வரை காபந்துப் பிரதமராக இருக்குமாறு பாரத ராஷ்டிரபதி, திரு. மொரார்ஜி தேசாயைக் கேட்டிருந்தார்.

### கருணாநிதி கோரிக்கை

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு கருணாநிதி நேற்று விடுத்துள்ள அறிக்கையில், மத்திய தலைவர்கள் மத்தியில் அதிகாரப் [illegible] இல்லாமல் உண்மையான ஜனநாயகம் நிலைநாட்டப்படவேண்டுமென்றும், இடைத் தேர்தல் நடைபெறுவதற்கு இடங்கொடுக்காமல் ஜனநாயக அரசொன்று மத்தியில் அமைக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

## "அவலமானமுறையில் ஜனதா வீழ்ச்சி!"

புதுடில்லி, ஜூலை 16

ஜனதாக் கட்சி மிகவும் அவமானமான முறையில் வீழ்ச்சி அடைந்துள்ளது. என்னதான் இருந்தாலும் இத்தகைய அவமானத்துக்குரிய விதத்தில் அது வீழ்ச்சி அடைந்திருக்கக்கூடாது.

இவ்வாறு முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

### இந்திரா கருத்து

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யார் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன எலருக்குமே சுயமரியாதை இருக்கவேண்டும் என்றும் திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

எது எவ்வாறிருப்பினும் மத்தியில் கூட்டரசு அமைக்கப்பட்டால் இந்திராகாங்கிரஸ் அதில் அங்கம் வகிக்காது என்றும் திருமதி காந்தி தெரிவித்தார். [இ]

# சரண்சிங்கும் ராஜினாமா!

புதுடில்லி, ஜூலை 16

இந்திய துணைப் பிரதமர்களில் ஒருவரும் நிதிஅமைச்சருமான திரு. சரண்சிங் மந்திரிசபையிலிருந்தும் ஜனதா கட்சியிலிருந்தும் ராஜினாமாச் செய்துள்ளார்.

ராஜினாமாச் செய்த திரு சரண்சிங், ஜனதா கட்சியில் இருந்து பிரிந்துசென்று புதிய கட்சி ஒன்றை உருவாக்கிய திரு. ராஜ்நாராயணனின் புதிய கட்சியில் சேர்ந்துகொண்டார்.

புதிய கட்சியில் சேர்ந்துகொண்ட திரு. சரண்சிங் அக்கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## தேசாயின் ராஜினாமா லோகசபையில் சமர்ப்பணம்

புதுடில்லி, ஜூலை 16

இந்திய லோகசபையும் ராஜ்யசபையும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்திய லோகசபை இன்று காலை சபாநாயகர் திரு. ஹெக்டே தலைமையில் கூடிய போது பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயின் ராஜினாமாக் கடிதமும் ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி பிரதமரின் ராஜினாமாவை ஏற்றுக்கொண்ட கடிதமும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது

லோகசபை எம் பிக்களினால் நிரம்பி வழிந்தது.

பிரதமர் திரு. தேசாயும் சபைக்கு வந்திருந்தார்.

சபை கூடிய 5 நிமிடத்தில் சபாநாயகர் சபை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவித்ததைத் தொடர்ந்து சபை ஒத்திவைக்கப்பட்டது.

ராஜ்யசபையும் உபஜனாதிபதி தலைமையில் கூடி ஒத்திவைக்கப்பட்டது. [இ]

## யாழ் நீதிமன்ற புதிய நீதவான்

[யாழ்ப்பாணம்]

யாழ் நீதிமன்றத்தின் நீதவானாக திரு சீ இ இராஜசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ் நீதவானாக கடமையாற்றிய திரு எஸ். ஏ. திலநாயக்கா நீர்கொழும்பு நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து யாழ் நீதவானாக திரு. சீ. இ. இராசஜசிங்கம் நியமனம் பெற்றுள்ளார். [செ]

## பாவனையாளர் கஷ்டம் நீங்கியது

[சங்கானை]

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கட்டிடப் பொருட்கள், நீர் இறைக்கும் இயந்திரம் சயிக்கிள் போன்ற பொருட்கள் விற்பனை நிலையத்தில் பாவனையாளர்களுக்கு நீண்டகாலமாக நிலவிவந்த குறையை தற்போதை நிர்வாகத்தினர் தீர்த்துவைத்துள்ளனர்.

முதலில் விற்பனை நிலையத்தில் முகாமையாளர் கொடுக்கும் துண்டை பெற்று பின்சிட்டை எழுதும் பகுதிக்கு சென்று அத்துண்டைக் கொடுத்து சிட்டையைபெற்று காசாளர் பிரிவில் பணத்தை செலுத்தி மீண்டும் விற்பனை நிலையத்தில் தேவைப்படும் பொருட்களை பல சிரமத்தின் மத்தியில் பெற்று வந்தனர். இப்போது பொதுமக்கள் எதுவித சிரமமுமின்றி விற்பனை நிலையத்திலேயே பணம் செலுத்தி பொருட்கள் பெறத்தக்கவகையில் நிர்வாகம் ஒழுங்குகள் செய்துள்ளது. [கு]

## செம்பியன்பற்று கொலைவழக்கு

# விசாரணை நடுவில் எதிரி விடுதலை

[யாழ்ப்பாணம்]

செம்பியன்பற்று கொலை வழக்கில் விசாரணை நடுவில் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

இவ் வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் ஜஸ்டிஸ் எம். ஜாமில் முன்னிலையில் நேற்று விசாரணைசெய்யப்பட்டது.

இவ் வழக்கில் 77 செப்டம்பர் 9ம் திகதி சங்கரப்பிள்ளை தவராசதுரை என்பவர், பேதுருப்பிள்ளைசாரலிங்கத்தை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

எதிரி சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினத் சட்டத்தரணி எஸ் சுரேந்திரன், சட்டத்தரணி செல்வி தம்பித்துரை ஆகியோர் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். தவராசா வழக்கை நடத்தினார். [ச]

## வதந்திகளை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமையும் கொண்டது. இவ்வழியில் நடக்கும் நாம், எமது மதத்திற்குப் பெருமை தேடித்தரும் வகையில், மதங்கள் போதித்த நல்வழியில் சென்று மற்றைய நாடுகளுக்கு ஒரு உதாரணமாகத் திகழ்வோம்'' என்று இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 23-ந் திகதி தீர்ப்பு

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தடை மீதான தீர்ப்பு இம்மாதம் 23-ந் திகதி வழங்கப்படும் என்று யாழ். மாவட் நீதிபதி திரு. ஆசீர்வாதத்தினால் வழங்கப்படும்.

## "பாடசாலை வளர்ச்சிக்கு அரசு சகல உதவியையும் செய்யும்எனஎண்ணக்கூடாது"

[சங்கானை]

"அரசாங்கம் எல்லா உதவிகளையும் பாடசாலைக்கு செய்யும் என எதிர்பார்க்கமுடியாது. எனவேதான் அவ்வப் பகுதி பெற்றோர் தமது சொத்தைப்போல் பாடசாலைகளைப் பேணிக்காத்து அதன்வளர்ச்சிக்கு ஒத்துழைக்கவேண்டும். இதேவேளை ஏதாவது பிழைகள் நடந்தாலும் அதனையும் தட்டிக்கேட்டு நிவர்த்திசெய்யவும் பெற்றோர்களுக்கு உரிமையுண்டு"

இவ்வாறு மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் சண்டிலிப்பாய் இந்துமகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இப்போட்டி பாடசாலை அதிபர் திரு. கா. வைத்தியநாதஐயர் தலைமையில் மாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

திரு தர்மலிங்கம் மேலும் கூறியதாவது-

"வித்தியாலயத்தின் இடவசதியின்மையைப்போக்க இருமாடிக்கட்டிடம் அமைப்பதற்கு ஆனமுயற்சி மேற்கொள்ளப்படும். இந்த ஆண்டில் முழுமனே நிறைவேறுதபட்சத்தில் மீதியை அடுத்தஆண்டு நிதியில் பூர்த்திசெய்துதருவேன். கல்வியில் கவனம் செலுத்துவதுபோல் விளையாட்டுப் போட்டிகளிலும் மாணவர் அக்கறைகொள்ளல்வேண்டும். போட்டி மனப்பான்மை அவர்களிடையே இருக்கவேண்டும் ஆனால் பொறாமையாக மாறக்கூடாது. இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகளிலிருந்து மாணவர்கள் தம்வாழ்விற்கு எத்தனையோ பயன்படும் விடயங்கள் அறியக்கூடியதாக இருக்கும்."

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. செ. தனஞ்சயன் பேசுகையில் "வசதியற்ற பிள்ளைகளும் இங்கு கல்வி பயின்று பட்டினப் பகுதி கல்லூரிகளைப்போல் சித்திஎய்தி பல்கலைக்கழகம் புகுவதற்கு தேர்ச்சிபெற்றிருப்பது இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சியையும் நிர்வாகத்திறனையும் எடுத்துக்காட்டியுள்ளது' என்றார்.

பிரதமவிருந்தினராக விளையாட்டுக் கல்வி அதிகாரி திரு வி தம்பிராசா கலந்துகொண்டார்.

மனையியல் கல்வி அதிகாரி திருமதி உ சுந்தரதாசன் பரிசில் வழங்கினார் பாண்டியன், சோழன், சேரன் இல்லங்கள் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றன. [கு]

## மரண அறிவித்தல்

### திருமதி சி. சரஸ்வதிதேவி

ஏழாலையைச் சேர்ந்த திரு. திருமதி தம்பிராசா ஆசிரியரின் மகள் சிவசோதியின் அன்பு மனைவி சரஸ்வதிதேவி அகாலமரணமானார். இவர் நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. திருமதி சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளை இராசம்மா வேலுப்பிள்ளை ஆகியோரின் புதல்வியும் கைத்தராசா நித்தியானந்தசிவம் [லண்டன்] இராசவேல் ஆகியோரின் சகோதரியும் சிவபாதம் ஆசிரியரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 18-7-79 புதன்கிழமை காலை 9 மணிக்கு நுணாவில் கிழக்கு சாவகச்சேரியில் நடைபெறும். 3068

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB 3946/78 The Eelanaadu P B No: 49; Telegrams: Eelanaadu
[illegible] 889.